பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 18 வியாழக்கிழமை 03.09.2020 கதிர் 298

### இது ரகசியம் அல்ல!

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பிணை பெறுவது மிகக் கஷ்டமான விவகாரம்.

ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. சுட்டுக்கொல்லப்பட்ட வழக்கில் கைதாகியுள்ள சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) எம்.பி. கடந்த பல பக்கம்02

# 20 ஆவது திருத்த வரைவுக்கு அமைச்சரவை பச்சைக்கொடி



## விரைவில் வர்த்தமானி அறிவிப்பு வெளிவரும் என்கிறார் கெஹலிய



அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளும் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று மாலை கூடிய விசேட அமைச்சரவைக் கூட்டத்தின்போதே இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என அமைச்சரவையின் பேச்சாளர் கெஹலிய றம்புக்வெல தெரிவித்தார். பக்கம் 02

## கரு ஜயசூரியவுக்கு வலுக்கும் ஆதரவு!

கொழும்பு, செப்.03

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவி கரு ஜயசூரியவுக்கு வழங்கப்பட்டால் போட்டியிலிருந்து விலகுவதற்கு ரவி கருணாநாயக்க, தயா கமகே, அர்ஜுன ரணதுங்க மற்றும் நவீன் திஸாநாயக்க ஆகியோர் பக்கம் 02

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
இலவச கருத்தரங்கு-2020
A/L தொழில்நுட்பபிரிவு
September - 5,6
8.00am - 2.30pm
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (SFT)
ஆசிரியர்கள்
சக்தி
முருகநிறோஜன்
ராகவன்
லவேந்திரன்
அனுமதி இலவசம்
அனைத்து மாணவர்களும் பங்கு பெறலாம்
077 017 5346, 077 170 3549

## ஜனாதிபதி செயலகம் முன் நேற்று திரண்ட வர்த்தகர்கள்



கொழும்பு, செப்.03

இலங்கைக்கு மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்து விநியோகிக்கும் பிரதிநிதிகள் நேற்று ஜனாதிபதி செயலகத்துக்கு பக்கம் 02

## கடும் மழையால் மன்னார் கிராமங்களுக்குள் வெள்ளம்



மன்னார், செப். 03

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன் தினமும் நேற்று அதிகாலையிலும் பெய்த கடும் மழை காரணமாக சில கிராமங்கள் பக்கம் 02

## அரசியல் பழிவாங்கல்கள் குறித்து அறிக்கை பிரதமரிடம் கையளிப்பு



கொழும்பு, செப்.03

2015 - 2019 ஆம் ஆண்டு வரையான அரசின் ஆட்சிக் காலத்தில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானோர் தொடர்பில் ஆராயும் குழுவின் முதன்மை அறிக்கை நேற்றுப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பில் பக்கம் 02

## 90.8 மி.மீற்றர் மழைவீழ்ச்சி யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், செப்.03

யாழ். மாவட்டத்தில் 90.8 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக திருநெல்வேலியில் உள்ள பிராந்திய வளிமண்டலவியல் ஆராய்ச்சி திணைக்களப் பொறுப்பதிகாரி த.பிரதீபன் தெரிவித்தார். பக்கம் 02

## போதைப்பொருளை இல்லாதொழிப்போம்!

### நீதி அமைச்சர் சபதம்

இலங்கையில் ஐந்து வீதமானவர்கள் போதைக்கு அடிமையாகி இருக்கின்றனர். அதனால் போதைப்பொருள் அச்சுறுத்தலை நாட்டில் இருந்து இல்லாமலாக்கியே தீருவோம். அதற்கு விசேட படையணி தேவையாக இருந்தால் அதனையும் மேற்கொள்வோம்.

– இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி பக்கம் 02

## மொட்டை மலையில் ஆணின் சடலம்!

அம்பாறை, செப்.03

அம்பாறை – அக்கரைப்பற்று மொட்டை மலையின் மேல் உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சாகாமம் வயல் பகுதியில் உள்ள மொட்டை மலையில் பக்கம் 02

## நான் வழங்கிய நியமனங்களை மாற்ற அழுத்தம் கொடுக்காதீர்!

### ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவு

கொழும்பு, செப். 03

ஆழமாகச் சிந்தித்து வழங்கப்பட்ட நியமனங்களை எந்தவொரு அழுத்தங்கள் காரணமாகவும் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. அதனால் சில நியமனங்களுக்கு எதிராக அதனை மாற்றுமாறு தமக்கு பக்கம் 02



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருடங்களாக விளக்கமறியலில் உள்ளார். அந்தக் கொலை வழக்கு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்டுள் ளமைதான் அவர் பிணை பெற்று வெளியே வர முடியாமைக்குக் காரணம். வழக்கு விசாரணை முடியும் வரை அவர் தொடர்ந்து உள்ளேயிருக்க வேண்டுமோ தெரிய வில்லை. இந்த வழக்கில் அவருக்கு எதிரா கப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

அவர் பிணை மனு கோரி விண்ணப்பிக் கும் போது பிணைக்கு சட்டமா அதிபர் திணைக்களம் ஆட்சேபிக்காமல் விட்டால் பிணை வழங்கப்படக் கூடும்.

இன்று ஜனாதிபதி ஆணைக்குழு முன் னிலையில் அவர் ஆஜராக வேண்டியிருப் பதால் சிறை அதிகாரிகள் அவரை நேற்று மட்டக்களப்பு சிறையிலிருந்து கொழும் புக்குக் கூட்டி வந்தனர்.

அவருக்காக மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைமைப் பதவி காத்திருக்கின்றது என்று பேச்சு. அவர் எப் போது வெளியில் வந்து, எப்போது அதனை ஏற்றுக் கொள்வார் என்பது தெரியவில்லை.

எனக்குத் தெரிந்தளவில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக் கப்பட்ட நிலையில் விளக்கமறியலில் இருக்காமல் பிணையில் வந்த இரண்டே இரண்டு பேர் உள்ளனர்.

ஒருவர் மிருதங்க இசைக் கலைஞர் கண்ணதாசன். ஏற்கனவே யுத்தத்தின் முடிவில் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடு விக்கப்பட்டவர் அவர். அரசு அல்லாத தனிப்பட்ட தரப்புகளின் முறைப்பாட்டில் அவ ருக்கு எதிராகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டது. அந்த வழக்கு விசாரணைக் காலம் வரை நீதிமன்றம் அவருக்குப் பிணை அனுமதி வழங்கியது. பின்னர் அந்த வழக்கில் வவு னியா மேல் நீதிமன்றத்தினால் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டமையால் அவருக்கு ஆயுள்தண்டனை வழங்கப் பட்டு, அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இப்போது, வவுனியா மேல்நீதிமன்றம் வழங்கிய அந்தத் தண்டனைத் தீர்ப்பை ரத்துச் செய்துள்ள மேன்முறையீட்டு நீதி மன்றம், அவருக்கு எதிரான வழக்கை மீள் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

அந்தத் தீர்ப்பை அவருக்குத் தெரியப் படுத்தப்படுவதற்காக வரும் 7ஆம் திகதி அவர் வவுனியா மேல்நீதிமன்றத்தில் முன் னிலைப்படுத்தப்படவுள்ளார். அச்சமயம் அவருக்கு எதிரான வழக்கு மீள் விசாரணை செய்யப்படும் என்பதை அவருக்குத் தெரியப்படுத்துவதுடன் அந்த விசாரணை பற்றிய முன்னேற்பாடுகளை நீதிமன்றம் முன்னெடுக்கும்.

ஏற்கனவே இந்த வழக்கின் முன்னைய விசாரணை ஆரம்பிக்கப்படும் வரையில் கண்ணதாசன் பிணையில் விடுவிக்கப்பட் டிருந்தமையால் அதேமுறையில் வரும் ஏழாம் திகதி முதல், மீள் விசாரணை ஆரம் பிக்கப்படும் வரை அவர் பிணையில் விடு விக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான வழக்கில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப் பட்ட பின்னரும் பிணையில் விடப்பட்ட மற்றொருவர் ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன்.

யுத்த காலத்தில் வவுனியாவில் சட்ட விரோத தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலை யம் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் ரெலோ அமைப்பைச் சேர்ந்த சிலர் கைது செய் யப்பட்டனர். பின்னர் அவர்களில் ஒருவரின் வீட்டிலிருந்த தொலைக்காட்சிப் பெட்டிக் குள் இருந்து 'மைக்ரோ பிஸ்டல்' ஒன் றைப் பொலிஸார் மீட்டனர் என்று கூறப் படுகின்றது. அந்தப் பிஸ்டல் செல்வம் அடைக்கலநாதனுடையது என்று அதை வைத்திருந்தவர் கூறியமையின் பெயரில் செல்வத்தைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அப்போது, கூட்டமைப்பின் எம்.பியே அல்லாத சட்டத்தரணி சுமந்திரன் தமது சட்டவாத நுணுக்கம் மூலம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப் பட்டிருந்த செல்வத்துக்கு பிணை பெற்றுக் கொடுத்தார். சுமந்திரனே நேரடியாக சட் டமா அதிபர் திணைக்களத்துக்குச் சென்று சட்டமா அதிபருடன் உரையாடி அந்த பிணைக்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டார் எனச் செய்தி வெளியிட்ட நினைவு எனக்கு உண்டு. பதினொரு வரு டங்களுக்கு முன்னர் நடந்த இந்த விவகா ரத்தின் போது சட்டமா அதிபராக இருந்தவர் பின்னாளில் சர்ச்சைக்குரிய பிரதம நீதி யரசராக விளங்கிய மொஹான் பீரிஸ் என்ற ஞாபகம். அவருடன் நீண்ட வாதப் பிரதிவாதம் நடத்தித்தான் வழக்கு விசார ணைக்கு முன்னர், செல்வத்தை பிணை யில் விடுவதற்கு சட்டமா அதிபர் தரப்பு ஆட்சேபிக்காமல் இருக்கும் இணக்கத்தை சுமந்திரன் நேரடியாகப் பெற்றுக் கொண் டார்.

அந்தச் சட்டமா அதிபர் போன்றவரல் லர் இப்போது இருக்கும் தப்புலடி லிவேரா. இவர் கொஞ்சம் 'பிடிச்சுராவி' ரகம். வழக்கு விசாரணை முடிவடைவதற்கு முன்னர் பிள்ளையானுக்கு பிணை வழக்குவதற்கு சட்டமா அதிபர் தரப்பினால் ஆட்சேபனை வழங்கப்படாமல் இருப்பதற்கான வாய்ப் புகள் மிகக் குறைவு என்கின்றன சட்டத் துறை வட்டாரங்கள்.

பிள்ளையான் எம்.பி. இந்த நெருக் கடியை எப்படித் தாண்டப் போகின்றார்? பொறுத்திருந்து பார்ப்போமே...?

–மின்னல்–

## கரு ஜயசூரியவுக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானித்துள்ளனர் என அறிய முடிகின்றது.

பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட் சிக்கு ஏற்பட்ட படுதோல்வியின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து விலகுவதற்கு ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்தார்.

இதனையடுத்து ஐ.தே.கவின் தலைவர் பதவிக்காக அக்கட்சியின் சிரேஷ்ட உறுப் பினர்கள் பலரும் தமது பெயர்களை முன் வைத்தனர். ரவி கருணாநாயக்க, தயா கமகே, நவீன் திஸாநாயக்க, அகில விராஜ் காரியவசம், வஜிர அபேவர்தன ஆகியோ ரின் பெயர்கள் பட்டியலிடப்பட்டன.

அதன் பின் அர்ஜுன ரணதுங்க மற் றும் ருவான் விஜேவர்தன ஆகியோரும் தலைமைப் பதவிக்கு போட்டியிடவிருக்கின் றனர் என அறிவித்தனர்.

எனினும் தனது உறவினரான ருவான் விஜேவர்தனவுக்கு தலைமைப் பதவியை வழங்கும் வகையிலான காய்நகர்த்தல் களை ரணில் விக்கிரமசிங்க மேற்கொண் டார். இதற்குக் கட்சிக்குள் எதிர்ப்புகள் கிளம்பின.

இந்நிலையிலேயே கரு ஜயசூரிய தலை மைப் பதவியை ஏற்க தயார் என்ற அறி விப்பை விடுத்தார். ஆனால் கருவை ஓரங் கட்டும் விதத்திலான அறிவிப்புகளை ரணில் விக்கிரமசிங்க விடுத்தார். எனினும், ரவி, நவீன், தயா கமகே, அர்ஜுன போன் றவர்கள் கருவுக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளனர்.

இதனால் ஐ.தே.கவுக்குள் மீண்டும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பரபரப்பான சூழ்நிலைக்கு மத்தியில் அக்கட்சியின் மத்திய செயற் குழுக் கூட்டம் நாளை சிறிகொத்தவில் கூடவுள்ளது.

## அரசியல் பழிவாங்கல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமரின் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது;

2015 - 2019 காலப்பகுதியில் அரச மற்றும் அரை அரச சேவையில் நிர்வாக ரீதியில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளான 6 ஆயிரத்து 952 பேர் இதுவரை இந்தக் குழுவில் மேன்முறையீடு செய் துள்ளனர்.

அதில் ஆயிரத்து 152 பேரின் மேன் முறையீடுகள் தொடர்பான விசாரணை கள், அவதானிப்புகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் என்பன இந்த அறிக்கை யில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2015 - 2019 காலப்பகுதியில் அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெற்றுள்ள விதம், குழுவில் முன்வைக்கப்பட்ட மேன்முறை யீடுகள் குறித்து ஆராயும் போது தெளி வாகியதாக குழு உறுப்பினர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு விளக்கினர்.

அரசியல் ரீதியில் பழிவாங்கல்களுக்கு உள்ளான அனைவருக்கும் நீதியை நிலை நாட்டுவது இக்குழுவின் கடமையாகும் என்றும், நிறுவன தலைவர்களுக்கு அறி விக்கப்படும் குழுவின் பரிந்துரைகள் நடை முறைப்படுத்தப்படாவிட்டால், அமைச்ச ரவைக்கு தெரியப்படுத்தி, அந்தந்த துறை களுக்கு பொறுப்பான அமைச்சர்களினூ டாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்குமாறு பிரதமர், குழு உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தினார்.

குழுவினால் இதுவரை ஆயிரத்து 152 மேன்முறையீடுகள் விசாரணைக்கு உட் படுத்தப்பட்டு, 484 அவதானிப்பு கோப்பு கள் பல்வேறு நிறுவனங்களுக்கு அனுப் பப்பட் டுள்ளன. விசாரணைக்காக குழு வுக்கு அழைக்கப்பட்ட மேன்முறையீடு களின் எண்ணிக்கை 372 ஆகும்.

கொவிட்-19 காரணமாக 3 மாத கால மாக குழுவின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட போதிலும், இதுவரை தொடர்ந்து நடை பெற்றுவரும் விசாரணைகளுக்கு அமைய நிறுவனத் தலைவர்கள் 34 பேர் குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளதாக அரசியல் பழி வாங்கல்கள் குறித்து ஆராயும் குழுவின் செயலாளர் சட்டத்தரணி சதுரிக்கா விஜே சிங்க இந்தச் சந்திப்பில் சுட்டிக் காட்டினார்.

குழுவின் தலைவராக இதற்கு முன்னர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கடமையாற்றியிருந்ததுடன், உறுப்பினர் களாக ஆரியரத்ன அருமப்பெரும, மஹிந்த செனவிரத்ன ஆகியோர் செயற் பட்டனர்.

இந்தச் சந்திப்பில் சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன, பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமரின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன, அரசியல் பழிவாங்கல்கள் குறித்து ஆராயும் குழு வின் (2015-2019) உறுப்பினர்களான ஏ.ஆரியரத்ன, மஹிந்த செனவிரத்ன, குழுவின் செயலாளர் சட்டத்தரணி சது ரிக்கா விஜேசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஜனாதிபதி செயலகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மோட்டார் சைக்கிள் இறக்குமதித் தடையை நீக்குமாறு கோரிக்கை விடுத்து இவ்வாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர்.

இறக்குமதியை கட்டுப்படுத்தும் திட்டத் துக்கு அமைய, மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்வதனை அரசு கட்டுப்பாடு விதித்துள்ளது. இந்தக் கட்டுப்பாடு காரண மாக குறித்த தொழிலுடன் தொடர்புடைய சுமார் 2 இலட்சம் பேர் தமது தொழிலை இழக்கும் அபாயம் உள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தப் பிரச்சினை குறித்து இன்று திறைசேரியின் செயலாளருடன் பேச்சில் ஈடுபட ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

## போதைப்பொருளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

களுத்துறை வியன்கல்ல பிரதேசத் தில் இன்று நடைபெற்ற நிகழ்வொன் றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: -

2015இல் எமது அரசு அதிகாரத்தில் இருந்து செல்லும்போது இலங்கையில் போதைப்பொருள் தொடர்பில் 6 ஆயிரத்து 600 வழக்குகள் இருந்தன. 2016இல் 8,000 வழக்குகள் இருந்தன. 2017ஆகும் போது 11ஆயிரம் வரை அதிகரித்திருந் தன. 2018இல் 12ஆயிரமாகி இருக்கின் றன. கடந்த வருடம் 16 ஆயிரமாக அதி கரித்துள்ளன. இந்த வருடம் மாத்திரம் இதுவரை போதைப்பொருள் சம்பந்த மான வழக்குகள் 13ஆயிரம் வரை பதி வாகி இருக்கின்றன. அதனால் இந்த நிலைமையில் இருந்து நாட்டைப் பாதுகாத் துக்கொள்ள வேண்டும்.

அரசு மக்களின் அன்றாட தேவை களை நிறைவேற்றுவதுபோல், நீண்டகாலத் துக்கு நாடு முன்னேறிச் செல்ல நடவடிக்கை எடுத்து வருகின்றது. அச்சம், சந்தேகம் இல்லாத பாதுகாப்பான சூழலுடன் நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற தேவையே ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அதற்காக எங்களுடன் கைகோர்க்குமாறு அனைவ ரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன் இந்த நாட்டில் இருந்து போதைப்பொருள் அச்சுறுத்தலை இல்லா மலாக்கியே தீருவோம். நாட்டு மக்கள் அனைவரையும் அதிலிருந்து பாதுகாப் போம். போதைப்பொருள் கடத்தல் தொடர் பான ஆரம்பம் முதல் இறுதிவரையான தகவல்களைத் தேடுவோம். அதற்கு விசேட படையணி ஒன்று தேவையாக இருந்தால் அதனையும் நாங்கள் மேற்கொள்வோம் - என்றார்.

## மொட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேல் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று இருப்பதை நேற்றுக் காலையில் கண்ட விவசாயிகள் பொலிஸாருக்கு தக வல் வழங்கினர். இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் உருக்குலைந்த நிலையில் இருந்த சடலத்தை மீட்டுள்ளனர்.

## 20ஆவது திருத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

20ஆவது திருத்தச் சட்ட வரைவை விரைவில் வர்த்தமானியில் வெளியிடவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஒருவர் இரண்டு முறை பதவி வகித்தல், தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் நாடாளுமன்றத்தினதும் ஜனாதிபதியினதும் பதவிக் காலத்தை ஐந்தாண்டுகளுக்கு மட்டுப்படுத்தல் உள் ளிட்ட விடயங்களைத் தவிர ஏனைய அனைத்து விடயங்களையும் நீக்க 20 ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு அனுமதி யளிக்கப்பட்டுள்ளது. (மற்றொரு செய்தி 08ஆம் பக்கதில்)

## 90.8 மி.மீற்றர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையைச் சூழவுள்ள கீழ் வளி மண் டலத்தில் ஏற்பட்ட தளம்பல் காரண மாக தற்போது ஏற்பட்டுள்ள மழைவீழ்ச்சி மேலும் 18 மணித்தியாலங்களுக்கு தொடர லாம் என வளிமண்டல திணைக்களத் தால் எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு நாள் களில் மட்டும் 90.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. நேற்று முன் தினம் காலை 8.30 மணியிலிருந்து நேற்று 8.30 மணி வரை 55.4 மில்லி மீற்றர் மழையும் நேற்று காலை 8.30 மணியி லிருந்து மாலை 2 30 மணி வரையில் 22.7 மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

அச்சுவேலிப் பகுதியில் 92.9 மில்லி மீற்றர் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகி யுள்ளது. அதேபோல தெல்லிப்பழை பிரதேசத்தில் 84.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இந்த வருடம் கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து இன்று வரை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 343.9 மில்லி மீற்றர் பதிவாகி யுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

## கடும் மழையால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீரில் மூழ்கியுள்ளன.

மன்னார் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட சாந்திபுரம், ஜீவபுரம், ஜிம்றோன் நகர், எமில்நகர், எழுத்தூர் உட்பட பல்வேறு கிராமங்களே நீரினால் மூழ்கியுள்ளன.

மழை நீர் வழிந்து செல்லக் கூடிய வித மாக வடிகால் அமைப்புக்கள், ஒழுங்கான முறையில் பராமரிக்கப்படாமையினால் மழை நீர் அனைத்தும் மக்களின் வீடு களில் தேங்கியுள்ளது.

## நான் வழங்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது அரசுக்கு அழுத்தங்கள் கொடுக்க வேண்டாம் என்று ஜனாதிபதி அனைவரி டமும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அமைச்சரவை, அமைச்சுகளின் செய லாளர்கள் உள்ளிட்ட நியமனங்கள் தொடர் பில் பல்வேறு தரப்பாலும் முன்வைக்கப் படும் அழுத்தங்கள் தொடர்பிலே ஜனாதி பதி இந்தக் கோரிக்கையை முன்வைத் துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த ஊடக அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த ஊடக அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அண்மையில் ஜனாதிபதி மற்றும் அர சால் வழங்கப்பட்ட பல்வேறு நியமனங்க ளுக்கு எதிராக பல்வேறு அழுத்தங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்நிய மனங்கள் அனைத்தும் எமது நாட்டு இறை யாண்மை, தேசிய பாதுகாப்பு மற்றும் சுபீட் சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தை செயற்படுத்துவதற்காக மிகவும் சிறந்த விடயங்களை கருத்திற்கொண்டே வழங் கப்பட்டுள்ளன. அதேபோன்று நியமிக்கப் பட்டவர்களின் தேசப்பற்று, தகைமைகள் மற்றும் பின்புலம் பரீட்சிக்கப்பட்டு சந்தர்ப் பத்துக்கு ஏற்ற வகையில் அரசின் கொள் கையைச் சிறப்பாக முன்னெடுப்பதற்கு இயலுமான

பக்கம் 11 »

# அதிபரின் இடமாற்றத்துக்கு எதிர்ப்பு மன்னாரில் மாணவர்கள் போராட்டம்!





மன்னார், செப். 03

மன்னார் பள்ளிமுனை புனித லூசியா மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிவந்த பாடசாலையின் அதிபரை வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்ய மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களும், மாணவர்களின் பெற்றோரும் நேற்று (புதன்கிழமை) காலைபாடசாலைக்கு முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் பள்ளிமுனை புனித லூசியா மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி வந்த அப்பாடசாலையின் அதிபர் எஸ்.கே.பிகிராடோவை இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் இடமாற்றத்தை இரத்துச் செய்யக் கோரி பள்ளிமுனை கிராமம் சார்பாக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் கே.ஜே.பிரட்லி பாடசாலைக்கு சமுகமளித்து பெற்றோருடன் கலந்துரையாடினார்.

இதன்போது, மன்னார் நகர முதல்வர் ஞா.அன்ரனி டேவிட்சன், மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜோட்சன் பிகிராடோ, மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.கிருஸாந்தன் மற்றும் மன்னார் நகர சபை உறுப்பினர் எஸ்.ஆர்.குமரேஸ் ஆகியார் பாடசாலைக்குச் சென்று பெற்றோருடன் கலந்துரையாடினார்.

இந்நிலையில், பாடசாலை வளர்ச்சியில் கூடிய கவனம் செலுத்தி பாடசாலையில் முன்னேற்றம் ஏற்பட்டுவரும் சந்தர்ப்பத்தில் இப்பாடசாலையின் அதிபரை இடமாற்றம் செய்வதை தாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் எனவும் அதிபரை தொடர்ந்தும் இப்பாடசாலையில் கடமையாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அதிபரின் இடமாற்றம் உடனடியாக இரத்துச்செய்யப்பட வேண்டுமெனவும் மக்கள் வலியுறுத்தினர்.

இதன்போது உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் பெற்றோர் மற்றும் மாணவர்களின் கோரிக்கைக்கு அமைவாக அதிபரின் இடமாற்றத்தை தற்காலிகமாக இரத்துச் செய்வதாகவும் மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் கே.ஜே.பிரட்லி உறுதியளித்தார். இந்நிலையில் ஆர்ப்பாட்டம் கைவிடப் பட்டது.

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.
A/L 2020 தொழில்நுட்ப பிரிவு
மாபெரும் விசேட செயலமர்வு
காலை 8 - மதியம் 2.30
07.09.2020 முதல்

| திகதி | பாடங்கள் |
|---|---|
| 7-9,12-15, 25-27 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 10-14,26-27 | பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் |
| 18-21 | I.C.T, விவசாய விஞ்ஞானம், புவியியல், ஊடகக்கல்வி, கணிதம்(7),சித்திரம் |

ஆரம்பம் 07.09.2020 (8am - 2.30pm)

- ✔ தொழினுட்பப்பிரிவின் அனைத்து மாணவர்களும் பங்கு பற்றலாம்.
- ✔ இம்முறை பரீட்சையில் எதிர்பார்க்கும் வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் வழங்கப்படும்.
- ✔ எதிர்பார்க்கை பாடப்பரப்புக்களின் விடயங்கள் அடங்கிய கையேடுகள் வழங்கப்படும்.
- ✔ கடந்த மூன்று வருடமாக தேசிய நிலையிலும்,மாவட்ட நிலையிலும் பல சாதனை மாணவர்களை உருவாக்கிய Techno worldஇன் ஆசிரியர்களால் நடாத்தப்படும்.
- ✔ கையேடுகளை சிரமமின்றி பெற்றுக்கொள்ள முற்பதிவுகளை மேற்கொள்ளவும்
- ✔ வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு : 0770175346, 0771703549

## 13 பற்றி எந்த முடிவுமே எடுக்கப்படவில்லையாம்!

### என்கிறார் பிரசன்ன ரணவீர

இந்தியாவால் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமை உள்ளடக்கிய 13 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்வது தொடர்பான எந்தவொரு இறுதிமுடிவையும் எடுக்கவில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முக்கியஸ்தரும் இராஜாங்க அமைச்சருமான பிரசன்ன ரணவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 19 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்யவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் இருந்துவருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி, உடுநுவர பிரதேசத்திலுள்ள பித்தளை உற்பத்தியாளர்களைச் சந்திப்பதற்காக துறைசார் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அப்பகுதிக்கு இன்று (புதன்கிழமை) விஜயம் செய்தார்.

இந்த விஜயத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர் -

தற்போது எமக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் கிடைத்துள்ளது. 19ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்வோம் என்பதை கடந்த பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் மேடைகளில் கூறிவந்தோம்.

நிச்சயமாக 19ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே தொடர்ந்தும் இருக்கின்றோம்.

எனினும், 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக நாங்கள் உத்தியோகபூர்வமாக எந்தமுடிவும் எடுக்கவில்லை. சிலர் தங்களது சொந்த நிலைப்பாடுகளையும், கருத்துக்களையும் வெளியிட்டு வருகின்றனர். இந்நிலையில் 20ஆவது திருத்தச் சட்டம் வரும்போது 13ஆவது திருத்தத்திற்கு நடக்கப்போவதைத் தெரிந்துகொள்ள முடியும். - என்றார்.

## 1,600 எயிட்ஸ் நோயாளர்கள் சமூகத்தில் இன்று நடமாட்டம்

இலங்கையில் 2000 எச்.ஐ.வி.(எயிட்ஸ்) நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், 1,600 நோயாளர்கள் பதிவாகாத நிலையில் இன்று சமூகத்தில் நடமாடி வருகின்றனர்.

-இவ்வாறு தேசிய பாலியல் தொற்று மற்றும் எச்.ஐ.வி. ஒழிப்புப் பிரிவின் தலைவர் விசேட மருத்துவர் ரசான்ஜலி ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எச்.ஐ.வி. தொற்றுக்கு இலக்காகிய நோயாளர்களில் 19 தொடக்கம் 25 வயதுடையவர்களே அதிகமாக உள்ளனர். இதுவரை 2000 எச்.ஐ.வி. நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், 1600 நோயாளர்கள் பதிவாகாத நிலையில் சமூகத்தில் இன்று நடமாடி வருகின்றனர்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவான நோயாளர்கள் இருக்கின்றனர்.

இவர்களில் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் ஆண்களே அதிகமாக உள்ளனர் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# இருபதுக்கு அவசரம் ஏன்?

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை நீக்கி அல்லது மாற்றி இருபதாவது திருத்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும் நடவடிக்கை இறக்கை கட்டிப் பறக்கின்றது.

மளமளவென்று காரியங்கள் முன்னெடுக்கப்படுகின்றமையைப் பார்க்கும்போது அதன் பின்புலம் குறித்து பல்வேறு தரப்புகளிலும் சந்தேகம் வருவது தவிர்க்கமுடியாதது.

இந்த யோசனைத் திட்டம் கடந்த வார அமைச்சரவையில்தான் முதலில் பிரேரிக்கப்பட்டது.

ஆனால் அதற்கிடையில் – ஒரு வாரத்துக்குள் – சட்ட வரைவு தயாராகி, நேற்றைய அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டு விட்டது.

முன்னதாக, இந்த வரைவைத் தயாரித்த சட்ட வரைஞர் திணைக்களம், நீதி அமைச்சின் ஊடாக அதனை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்ப, சட்டமா அதிபர் தன் பங்குக்கு அதனைப் பரிசீலித்து வழமையான நடைமுறையின் கீழ் அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றமுடியும் என்று அங்கீகாரமும் வழங்கிவிட்டார்.

அரசமைப்பை மாற்றுவது, திருத்துவது அல்லது புதுப்பிப்பது தொடர்பாக வழமையாக இரண்டு வழிமுறைகள் உள்ளன.

முதலாவது – சில பொதுவான ஷரத்துகள், பிரிவுகளை சாதாரண நடைமுறையின் கீழ் செய்தல். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் அதனைச் செய்ய முடியும்.

இரண்டாது – சில முக்கியமான, அடிப்படையான விடயங்களில் மாற்றத்தைக் கொண்டு வருதல். அதனை செய்வதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கொடுப்பு மூலம் மக்கள் அனுமதியைப் பெறவும் வேண்டும்.

சமர்ப்பிக்கப்படும் அரசமைப்பு மாற்றம், திருத்தம் அல்லது புதுப்பித்தல் வரைவு மேற்படி இந்த இரண்டு நடைமுறைகளில் எந்த வழியில் நிறைவேற்றப்படும் என்பதை உயர்நீதிமன்றமே தீர்மானித்து அறிவிக்கும்.

இப்போது கோட்டாபய அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள 20ஆவது அரசமைப்புத் திருத்த வரைவை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையினால் நிறைவேற்றினால் போதுமானது என சட்டமா அதிபர் பரிந்துரைத்திருக்கின்றார்.

அந்த வரைவு வடிவத்துக்கு அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்துள்ளமையால் அது உடனடியாக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

அரச வர்த்தமானியில் அது பிரசுரிக்கப்பட்டு இரண்டு வார காலத்தின் பின்னரே அதனை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும்.

அப்படி நாடாளுமன்றத்தில் அது சமர்ப்பிக்கப்பட்டாலும், யாரேனும் பிரஜை அந்த அரசமைப்புத் திருத்துக்கான சட்ட வரைவின் செல்லுபடித் தன்மையை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியும்.

நாடாளுமன்றத்தில் அந்த அரசமைப்புத் திருத்த சட்ட வரைவு சமர்ப்பிக்கப்பட்டு ஒரு வார காலத்துக்குள் அவ்வாறு சவாலுக்கு உட்படுத்தும் மனுக்களை உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கலாம்.

அத்தகைய சாவலுக்கு உட்படுத்தும் மனுக்கள் கிடைத்தால் அவை குறித்து குறுகிய காலத்தில் உயர்நீதிமன்றம் பகிரங்க விசாரணை நடத்தித் தீர்மானங்களை எடுக்கும். இந்த அரசமைப்பு சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றினால் போதுமா அல்லது அது அரசமைப்பின் மிக முக்கியமான பிரதான ஏற்பாடுகளுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியும் பெறப்பட வேண்டுமா என்ற தனது தீர்மானத்தை உயர்நீதிமன்றம் நாடாளுமன்ற சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் எழுத்தில் அறிவிக்கும்.

இதுதான் நடைமுறை.

அரசு இப்போது தயாரித்துள்ள இருபதாவது சட்டவரைவைப் பொறுத்தவரை பல தரப்பினரும் அது ஜனநாயக விரோதமான நடவடிக்கை என்று விமர்சிப்பதால் நிச்சயம் அதனை உயர்நீதின்றத்தில் சவாலுக்கு உட்படுத்துவர் என்பது உறுதி. டசின் கணக்கில் ஆட்சேபனை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சரி. இனி, இறுதியான விடயத்திற்கு வருவோம். இந்தத் திருத்தத்தைக் கொண்டு வர கோட்டாபய அரசு ஏன் இவ்வளவு அவரசரப்படுகின்றது? அதற்குக் காரணம் உண்டு. சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா?

19ஆவது திருத்தத்தின்படி தற்போதைய ஜனாதிபதி எந்த அமைச்சையும் தமக்குக் கீழ் வைத்திருக்க முடியாது – பாதுகாப்பு அமைச்சு உட்பட.

ஆனால் பாதுகாப்பு அமைச்சை வேறு யாரிடமும் – தமது அண்ணன் பிரதமரிடம் – கூட கையளிக்க விரும்பாத கோட்டாபய, அதனால் அந்த அமைச்சுக்குப் பொறுப்பாக யாரையும் நியமிக்கவில்லை. அதேசமயம் அரசமைப்பு சட்டவிதிகள் தடுப்பதால் அந்த அமைச்சின் அமைச்சர் தாம் என்று அறிவித்துச் செயற்படவும் முடியாத நிலையில் அவர் உள்ளார். அதனால் பெற்றோர் இல்லாத அநாதைக் குழந்தைபோல, பாதுகாப்பு அமைச்சு உள்ளது. பொறுப்பான அமைச்சர் இல்லாதமையால் அது ஜனாதிபதியின் நேரடிக் கவனிப்பில் உள்ளது. அவ்வளவுதான்.

19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்கினால்தான் – அல்லது மாற்றினால்தான் – தம்மை பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி அறிவித்துக் காரியங்களை ஆற்ற முடியும்.

அதனால்தான் இந்த அவசரம்.

# நாடு முன்னேறவேண்டும் எனில் அரசமைப்பில் திருத்தம் வேண்டும்

## என்கிறார் சரத் வீரசேகர



நாட்டை முன்னேற்ற வேண்டுமெனில், அரசமைப்பில் திருத்தமொன்று கொண்டு வரப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப் பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

19 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக, நாடு எந்தளவு பிரச்சினைகளை சந்தித்தது என் பதை நாம் அனைவரும் அறிவோம்.

இதனால், இதனை மாற்றியமைக்க வேண்டியது முக்கியமான பொறுப்பாகவே காணப்படுகிறது.

இந்த நாட்டை முன்னேற்ற வேண்டுமெனில், அரசமைப்பில் திருத்தமொன்று கொண்டுவரப்பட வேண்டும்.

இதனை தான் அரசாங்கம் என்ற ரீதியில் நாம் மேற்கொள்ள முயற்சித்து வருகின்றோம்.
- எனக் குறிப்பிட்டுள்ளார்.

## உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்:

# ரஞ்சித்தும் மாரசிங்கவும் நேற்று ஆணைக்குழுவில் வாக்குமூலம்!

கொழும்பு, செப்.03

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் ஆஷு மாரசிங்க ஆகியோர், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் பொலிஸ் பிரிவில் நேற்று முன்னிலையாகியிருந்தனர்.

அவர்கள் இருவரும் வாக்குமூலம் வழங்குவதற்காக நேற்று முற்பகல் 9.40 மணியளில் குறித்த பொலிஸ் பிரிவில் முன்னிலையாகியிருந்தனர்.

இந்தநிலையில், ரஞ்சித் மத்தும பண்டார சுமார் 3 மூன்றரை மணி நேரம் வாக்குமூலம் வழங்கிய பின்னர் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

குறித்த ஆணைக்குழுவில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் ஆகியோர் நேற்று முன்தினம் முன்னிலையாகி சாட்சியமளித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 23 ஆயிரம் ஹெக்டேயர் வனப்பகுதியை சிங்கராஜவனத்துடன் இணைக்க தீர்மானம்!



சிங்கராஜ வனத்தை சுற்றியுள்ள 23 ஆயிரம் ஹெக்டேயர் காட்டுப் பகுதியை சிங்கராஜ வனத்துடன் இணைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.ஏ.சி. வேரகொட இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, சிங்கராஜ வன அமைப்பாக இதனை நிர்வகிக்கத் தீர்மானித்துள்ளதுடன், இதற்கான அனுமதியும் பெறப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கராஜ வனத்தின் எல்லைப் பகுதியை வரையறுக்கும் நடவடிக்கையும் முடிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கான வர்த்தமானி அறிவித்தலை அடுத்த மாதத்திற்குள் வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# அபுதாபியில் வெடிப்பு இலங்கையர் மரணம்!

மாத்தறை, செப்.03

ஐக்கிய அரபு இராச்சியத்தில் அமைந்துள்ள உணவகமொன்றில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் இலங்கைப் பிரஜையொருவர் உயிரிழந்துள்ளார்.

மாத்தறை பகுதியைச் சேர்ந்தரங்கன சமித் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் தலை நகர் அபுதாபி மற்றும் அதன் சுற்றுலா மையமான டுபாயில் கடந்த தினங்களில் இரண்டு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியிருந்தன.

கடந்த திங்கட்கிழமையன்று இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டனர் மற்றும் பலர் காயமடைந்தனர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்தன.



அதேநேரம் தலைநகர் அபுதாபியில் நடந்த வெடிப்பில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர் என அபுதாபி அரசாங்க ஊடக அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ஐக்கிய அரபு இராச்சியத்தில் அமைந்துள்ள உணவகமொன்றில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் இலங்கைப் பிரஜையொருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622

# வடக்கில் புலிகள் ஆதிக்கத்தை அனுமதிக்க சம்மதித்த மஹிந்த!

## இப்போதுதான் மனம் திறக்கிறார் சொல்ஹெய்ம்

கொழும்பு, செப். 03

தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கில் ஆட்சி செய்வதை அனுமதிப் பதற்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தயாராக இருந்தார் என நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் பேச்சுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தவேளை விடுதலைப் புலிகளின் தலைவருடன் சந்திப் பொன்றை மேற்கொள்ளப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விருப்பம் வெளியிட்டார் எனவும் அவர் கூறியுள்ளார்.

பிரபாகரனுடன் மாநாடொன்றை நடத்துவதற்கு விருப்பம் கொண்டுள்ளார் எனத் தன்னிடம் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார் என்றும், பிளவுபடாத இலங்கைக்குள் விடுதலைப் புலிகள் வடக்கில் ஆட்சி செய்வதை அனுமதிப்பதற்குத் தான் தயார் என மஹிந்த தன்னிடம் கூறினார் எனவும் சொல்ஹெய்ம் குறிப்பிட்டுள்ளார்.

இறுதி யுத்தத்தின்போது கப்பல்கள் மூலம் பொது மக்களை வெளியேற்ற நோர்வே முன்வந்தது என அந்தச் செவ்வியில் குறிப்பிட்டுள்ள சொல்ஹெய்ம், அனைத்து பொதுமக்களையும் விடுதலைப் புலிகளையும் பதிவு செய்யவேண்டும் எனத் தாங்கள் வேண்டுகோள் விடுத்ததாகவும் கூறியுள்ளார்.

அந்தப் பெயர்களை கொண்டவர்களைக் கண்டுபிடித்து கப்பல் மூலம் தென்பகுதிக்கு கொண்டு செல்வதற்கான வேண்டுகோளை தாம் முன்வைத்த போதிலும் பிரபாகரன் அதனை நிராக ரித்து விட்டார் எனவும் சொல்ஹெய்ம் தெரிவித் துள்ள



# ஆசிரிய உதவியாளர்களுக்கு மத்திய மாகாணத்தில் நியமனம்

## வழங்க நடவடிக்கை என்கிறார் ஆளுநர்



கொழும்பு, செப். 03

ஆசிரியர் பயிற்சிகளை நிறைவுசெய்த மத்திய மாகாணத்திலுள்ள ஆசிரியர் உதவியாளர்களுக்கான நிரந்தர நியமனத்தை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய மாகாண ஆளுநர் லலித்கமகே தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகளுக்கும், மத்திய மாகாண ஆளுநருக்குமிடையிலான கலந்துரையாடலொன்று கண்டியிலுள்ள ஆளுநரின் வதிவிடத்தில் நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) நடைபெற்றது.

இதன்போது மலையக ஆசிரியர் உதவியாளர்கள் விடயம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட பயிற்சிகளை நிறைவுசெய்துள்ள போதிலும் மத்திய மாகாணத்திலுள்ள சுமார் 420 ஆசிரியர் உதவியாளர்கள் இன்னும் உரிய வகையில் ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்படவில்லை என சுட்டிக் காட்டிய இ.தொ.கா. பிரதிநிதிகள், அவர்களுக்கு நியமனங்களை வழங்குவ தற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டனர்.

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா. பிரதிநிதிகளின் கோரிக்கையை ஏற்ற ஆளுநர், விரைவில் இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என உறுதியளித்தார்.

பிரதமரின் இணைப்பு செயலாளரும், ஊவா மாகாண முன்னாள் அமைச்சருமான செந்தில் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரன், மத்திய மாகாண சபை யின் அவைத் தலைவர் துரை மதியுகராஜா, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் கணபதி கணகராஜ் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# ஈஸ்டர் தாக்குதல் சாட்சியம்: பிள்ளையான் கொழும்புக்கு!



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் இன்று (வியாழக்கிழமை) சாட்சியமளிப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேச துரை சந்திரகாந்தன் மட்டக்களப்பு சிறையில் இருந்து கொழும்புக்கு நேற்று காலை பலத்த பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் கடந்த 2015 ஒக்ரோபர் 11 திகதி கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் சிறையிலுள்ள சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு உயிர்த ஞாயிறு தாக்குதல் தொடர் பாக ஜனாதிபதி ஆணைக் குழுவில் சாட்சியமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பிள்ளையான் இன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக் குழுவில் சாட்சியமளிப்பதற்காக நேற்று மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து விசேட அதிரடிப்படையி னரின் பலத்த பாதுகாப்புடன் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

# பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதம் வவுனியாவில் வழங்கி வைக்கப்பட்டது!







வேலையில்லா பட்டதாரிகளிற்கான நியமன கடிதங்கள் வழங்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

தொழில் பெறும் 50 ஆயிரம் பட்டதாரிகளின் பெயர் விவரங்கள் உள்ளூராட்சி மாகாணசபை அமைச்சின் இணையத் தளத்தில் அண்மையில் வெளியிடப்பட்டிருந்தது.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தை சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகளின் பெயர் விவரங்கள் அதில் வெளியிடப்பட்டிருந்தன.

அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று காலை இடம்பெற்றது.

நிகழ்வில் அதிதிகளாக கலந்துகொண்ட, அரச அதிபர் சமன்பந்துலசேன, மேலதிக அரச அதிபர் திரேஸ்குமார், பிரதேச செய லாளர்களான க.சிவகரன், இ.பிரதாபன், நா.காமதாசன், பிரதி தேர்தல் ஆணையாளர் லலித் ஆனந்த மற்றும் இராணுவ அதிகாரிகள் பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்களை வழங்கிவைத்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஆட்சியைப் பிடிக்கவும் தக்கவைக்கவும் இனவாதத்தைக் கக்கும் சிங்களவர்கள்





ஆட்சியைத் தக்க வைக்கவும் ஆட்சியைப் பிடிக்கவும் சிங்கள அரசியல் தலைவர்கள் இனவாதத்தைக் கையில் எடுத்திருக்கின்றார்கள்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

அக்கராயன் கிழக்கு மக்களுடனான நேற்றைய சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது:-


மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுள்ள தற்போதைய அரசும் இப்போது எதிர்க்கட்சியில் உள்ளவர்களும் மிகப் பாரிய அளவில் இனவாதத்தை கக்கத் தொடங்கி இருக்கின்றார்கள்.

அவர்கள் சிங்கள மக்களிடம் அதிக அளவில் யார் இனவாதக் கருத்துக்களை விதைக்கிறார்களோ அவர்கள்தான் ஆட்சியைப் பிடிக்க முடியும் என நம்புகின்றார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா நாடாளுமன்றில் அண்மையில் தெரிவித்த கருத்தும் சிங்கள அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோரின் கருத்துக்களும் இதைப் புலப்படுத்துகின்றன.

2010ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் அவருக்குத்தான் வாக்களித்தார்கள் என்பதை மறந்து சரத் பொன்சேகா செயற்படுகிறார்கள்.

தமிழர்களே இந்த மண்ணினுடைய பூர்வீகக் குடிகள். விஜயன் வருகையின் பின்னரே இலங்கையில் சிங்களவர்கள் வருகை தந்தனர் என்பது வரலாற்று உண்மை. சிங்களத் தலைவர்கள் விட்ட வரலாற்றுத் தவறுகளே எமது அப்போதைய இளைஞர்களை ஆயுதங்களை ஏந்த வைத்தன. இந்த வரலாற்றுத் தவறுகளை சிங்களத் தலைவர்கள் தொடர்ந்தும் விடாமல் இருக்க வேண்டும். அத்துடன் சிங்கள மக்களுக்கு உண்மை நிலைகளை சிங்களத் தலைவர்கள் கூறி அவர்களைத் தெளிவுபடுத்த வேண்டும் - என்றார்.

## சுழிபுரத்தில் உணவகம் மீது தாக்குதல்





வட்டுக்கோட்டை, செப். 03

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றின் மீது நேற்று இரவு 8.30 மணியளவில் அப்பகுதியில் உள்ள நபர் ஒருவர் மேற் கொண்ட தாக்குதலில் கடையின் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன.

சம்பந்தப்பட்ட நபர் கடன் கேட்டு, கடைஉரிமையாளர் அதனைவழங்க மறுத்ததாலேயே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

## நேருக்கு நேர் மோ. சைக்கிள்கள் மோதியதில் மூவருக்குப் படுகாயம்

### சித்தன்கேணிச் சந்திக்கு அருகில் சம்பவம்

சித்தன்கேணி, செப். 03

சித்தன்கேணி சந்திக்கு அருகில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் மூவர் படுகாயமடைந்தனர். அவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

நேற்று இரவு 8 மணியளவில் சித்தன்கேணியில் இருந்து பண்டத்தரிப்பை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் பண்டத்தரிப்பிலிருந்து சித்தன்கேணி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் சித்தன்கேணி சந்திக்கு அருகில் நேருக்கு நேர் மோதியதில் மூவர் படுகாயமடைந்துள்ளனர். இதில் ஒருவரது நிலை மிகவும் கவலைக்கிடமாக காணப்படுகிறது.



தவறாத பக்கத்தில் முந்திச் சென்றதாலேயே விபத்து நிகழ்ந்துள்ளதாக கூறப்படுகின்றது என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதில் பண்டத்தரிப்பினைச் சேர்ந்தவர்களான திருஞானதீபன் (வயது 20), ரஞ்சன் (வயது 28) என்பவர்களும் சங்கானையைச் சேர்ந்த பிரதீப் (26) என்பவருமே படுகாயமடைந்துள்ளனர்.

இவர்கள் மூவரும் சிகிச்சைகளுக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## ஜனாதிபதி ஆணைக்குழு ஹக்கீமுக்கும் அழைப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் பொலிஸ் பிரிவில் முன்னிலையாகுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக அவரை முன்னிலையாகுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷூ மாரசிங்க ஆகியோர், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் நேற்று முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியிருந்தனர்.

## அரசமைப்பு உருவாக்க நிபுணர்கள் குழுவில் கலாநிதி சர்வேஸ்வரன்,பேராசிரியை நஜீமா



புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக 9 பேர் அடங்கிய நிபுணர் குழு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவிற்கான நிபுணர்களை நியமிப்பது தொடர்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில், நிபுணர் குழுவில் தமிழ் – முஸ்லிம் மக்களின் உணர்வுகளையும் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கும் வகையில் நிபுணர்கள் உள்வாங்கப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில் அமைக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவில் கலாநிதி ஏ. சர்வேஸ்வரன் மற்றும் பேராசிரியை நஜீமா கமுறுடீன் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவினர் இலங்கையில் வாழுகின்ற பல்லின சமூகங்களினதும் அபிலாசைகளையும் காலாச்சார பண்பாடுகளையும் கருத்திலெடுத்து நாட்டின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு உகந்த அரசமைப்பை உருவாக்க உதவுவர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சின் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

## ‘தாயகம்’ மாதாந்த உதவி வழங்கும் நிகழ்வு








‘தாயகம்’ அறக்கொடை நிறுவனத்தின் மாதாந்த உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 83 மாணவர்களிற்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை அன்று 3.30 மணியளவில் கொனிக்கா ஸ்டூடியோ மண்டபத்தில் வைத்து கற்றல் உபகரணங்கள், சீருடை கள்,காலணிகள் மற்றும் 3 மாணவர்களிற்கு துவிச்சக்கரவண்டிகள் என்பன அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

‘தாயகம்’ அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் வீ.சிறீதரன் மற்றும் திருமதி சிறீதரன் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

# நாட்டுக்கான அரசமைப்பு மாற்றத்தை உருவாக்குவதுதான் அரசின் திட்டம்

## கூறுகிறார் விமல் வீரவன்ஸ



நாட்டுக்கான ஓர் அரசமைப்புத் திருத்தச்சட்டத்தை ஸ்தாபிப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

அரசமைப்பில் திருத்தத்தை மேற்கொள்வதற்கான அமைச்சரவைப் பத்திரம் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான காலமும் கோரப்பட்டுள்ளது. நாட்டில் தற்போது இதுதொடர்பான ஒரு விவாதம் காணப்படுகிறது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட, இது தொடர்பான எதிர்மறை கருத்துக்களை முன்வைத்துள்ளமையை நாம் பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, நாட்டுக்கான ஓர் அரசமைப்புத் திருத்தச்சட்டத்தை ஸ்தாபிப்பதே எமது நோக்கமாக இருக்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# அனைத்துக் கட்சிகளுடனும் அரசு அரசமைப்பு தொடர்பில் பேசவேண்டும்!



அரசமைப்பு தொடர்பாக அனைத்துக் கட்சிகளுடனும் அரசு பேச்சு நடத்த வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

தற்போது இருக்கும் அரசமைப்புத் தொடர்பாக அனைத்துக் கட்சிகளுடனும் அரசு பேச்சு நடத்த வேண்டும்.

அவற்றின் கருத்துக்களை கேட்டறிந்துக் கொண்டு, அரசமைப்பில் ஒரு மாற்றமொன்று தேவை எனில், அரசமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

அல்லாது மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பதால், அரசு சுயாதீனமாகவும் இந்த விடயத்தில் செயற்படலாம்.

அரசு இந்த விடயத்தில் எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டாலும், அது மக்களைத் தான் சாரும் என்பதை மறந்துவிடக் கூடா எனக் குறிப்பிட்டுள்ளார்.

# 13 நீக்கம் தொடர்பாக எவரும் பேசவில்லை!

## என்கிறார் அங்கஜன்



13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக எந்தவொரு தரப்பினரும் பேசவில்லை என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'அரசாங்கம் சார்பில் ஒவ்வொருவரும் தனிப்பட்ட கருத்துக்களை முன்வைத்து வந்தாலும், 13 ஆவது திருத்த சட்டத்தில் ஒரு சில மாற்றங்கள் வந்தால் ஒளிய, அதனை முழுமையாக மாற்றுவதற்கு எந்தத் தரப்பினரும் பேசவில்லை.

13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதில்தான் உண்மையான நெருக்கடியை அரசாங்கத்தில் நாங்கள் காண்கின்றோம். 60 வீதமான நிதி மாகாண சபைகளுக்குத் தான் ஒதுக்கப்படுகின்றது.

நாட்டில் மாகாண சபைகள் ஊடாக பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்கள் இல்லாத பட்சத்தில், ஆளுநர்கள் தான் 60 வீதமான நிதியைத் தீர்மானிக்கின்றார்கள்.

இதனை ஜனநாயகத்திற்கு எதிரான விடயமாக அரசாங்கம் பார்க்கின்றது. அந்த வகையில், மாகாண சபைத் தேர்தலை மிக விரைவில் நடத்த வேண்டும் என்ற அழுத்தத்தை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியிலிருந்து மாலை 1.00 மணி வரை -

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

பரந்தன், உமையாள்புரம், ஆனையிறவு, ஆனையிறவு உப்பளம் ஆகிய இடங்களிலும்,

காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை

**வவுனியா பிரதேசத்தில் -**

பம்பைமடுவிலிருந்து குருக்கள்புதுக்குளம் வரை, பூவரசங்குளத்திலிருந்து செங்கற்படை, வேளாங்குளம் கடற்படை முகாம், பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், ஆண்டியப்புளியங்குளம், நித்தியநகர் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும் என்று மின்பொறியிலாளர் அறிவித்துள்ளார்.

# பதிவு செய்ய 150 கட்சிகள் விண்ணப்பித்துள்ளன!

2020 ஆண்டுக்கான அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்காக 150 கட்சிகள் விண்ணப்பித்துள்ளன.

சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் சட்ட பணிப்பாளர் நிமல் புஞ்சிஹேவா இதனைத் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பிக்கப்பட்டுள்ள 150 கட்சிகளில் 70 கட்சிகள் ஏற்கனவே உள்ளவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், விண்ணப்பித்துள்ள கட்சிகளில் 40 விண்ணப்பங்கள் அடிப்படை ஆவணங்களைக் கூடப் பூர்த்தி செய்யாமையால் நிராகரிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

விண்ணப்பித்துள்ள கட்சிகளால் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன எனவும் விரைவில் நேர்முகத்தேர்வை நடத்தி கட்சிகள் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் விவரங்களை ஆணைக்குழு வெளியிடும் எனவும் நிமல் புஞ்சிஹேவா சுட்டிக்காட்டியுள்ளார்.

# டிஜிற்றல் மயமாகின்றது கொழும்பு பங்குச் சந்தை!


கொழும்பு பங்குச் சந்தையை எதிர்வரும் 17ஆம் திகதி முதல் டிஜிட்டல் மயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைய இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது, கொழும்பு பங்குச் சந்தையை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளன என ஆணைக்குழு தெரிவித்தது.

அத்துடன், கொரோனாத் தாக்கம்



காரணமாக பங்குச் சந்தையின் நடவடிக்கைகள் 52 நாள்கள் முடங்கியிருந்த பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக, கொழும்பு பங்குச் சந்தையை டிஜிட்டல் மயப்படுத்துவதன் மூலம், பங்குச் சந்தை நடவடிக்கைகளை புதிய உத்வேகத்துடன் முன்னெடுக்க முடியும் எனவும், ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# நான்கு மாவட்டங்களுக்கு மஞ்சள் நிற எச்சரிக்கை!

நாட்டின் நான்கு மாவட்டங்களுக்கு முதலாம் கட்ட மண்சரிவு எச்சரிக்கையான மஞ்சள் நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்தின் நியாகம பிரதேச செயலாளர் பிரிவுக்கும், இரத்தினபுரி மாவட்டத்தின் எஹெலியகொட பிரதேச செயலாளர் பிரிவுக்கும், இவ்வாறு மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட மற்றும் யட்டியாந்தோட்டை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் மத்துகம, வலல்லாவிட்ட, இங்கிரிய, அகலவத்த, ஹொரணை மற்றும் புளத்சிங்ஹள ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நாட்டின் 2 மாவட்டங்களுக்கு இரண்டாம் கட்ட மண்சரிவு எச்சரிக்கையான செம்மஞ்சள் நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்தின் எல்பிட்டிய, நாகொட மற்றும் பத்தேகம பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், களுத்துறை மாவட்டத்தின் பாலிந்த நுவர பிரதேச செயலாளர் பிரிவுக்கும், செம்மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அனர்த்தங்கள் மற்றும் மின்னல் தாக்கங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, மக்கள் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியமில்லை



## சட்டமா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, செப் 02

அரசமைப்பின் 20 ஆவது திருத்த வரைவை சர்வஜன வாக்கெடுப்பு இன்றி, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என்று சட்டமா அதிபரினால் நீதி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசால் தயாரிக்கப்பட்டுள்ள 20 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்ட வரைவு, சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா அவதானத்துக்காகநேற்றுஅனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இதன்படி இன்று அது தொடர்பாக நீதி அமைச்சுக்கு அறிவித்துள்ள சட்டமா அதிபர், அந்தத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறை வேற்றலாம் எனவும், அதிலுள்ள விடயங்களுக்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டிய அவசியம் கிடையாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரி யொருவர் ஊடகங்களுக்கு இந்தத் தகவ லைக் கூறியுள்ளார்.

# ‘19’ நாட்டுக்கு தேவையானது

## சொல்கிறார் ராஜித

கொழும்பு, செப். 02

19 ஆவது திருத்தச்சட்டமானது நாட்டுக்குத் தேவையானது. அதை நாம் இல்லா தொழிக்க முற்படக்கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இது குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 19 ஆவது திருத்தச்சட்டமா னது நாட்டுக்குத் தேவையான ஒன்றாகும். அதில் உள்ள குறைப்பாடுகளை நீக்கவே நாம் முற்பட வேண்டும்.

இதனைச் செய்யாமல், அதில் உள்ள ஜனநாயகத்தை இல்லாதொழிக்க இவர் கள் முற்படக்கூடாது.

நாம்19ஆவதுதிருத்தச்சட்டத்தைப்பாதுகாக்கவே முயற்சிக்கிறோம். இதன் ஊடாக அரசு பலமடைந்துள்ளது என்று தான் கூறவேண்டும்.

இப்படியான ஒரு திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க முற்படுவதானது, சர்வாதிகார ஆட்சிக்கு வழிகோலுவதாகவே அமைந்துள்ளது – என்றார்.

# சுதந்திரக் கட்சி 69 ஆம் ஆண்டு நிறைவில் நல்லூரில் வழிபாடு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செப் 02



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 69 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.


யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புகுழுவின் இணைத் தலைவரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் இன்று காலை ருத்திராபிகேமும் சிறப்பு வழிபாடுகளும் இடம்பெற்றன.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 69 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நல்லூர் கந்தசுவாமிஆலயத்தில்வழிபாட்டைமேற்கொண்டுள்ளோம்.

முதன் முதலாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒரு ஆசனம் கிடைத்திருக்கிறது. இந்த அர சில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து மக்களுடைய அனைத்து தேவைகளை யும் நிறைவு செய்வதற்கு இறைவனுடைய அருள் துணை நிற்க வேண்டும்.

அதே நேரம் சிறிலங்கா சுதந்திர கட்சி மிகப்பழமையான கட்சி. அதனுடாக அரசுடன் இணைந்து மக்களுக்கு சேவையாற்ற இறைவன் துணையிருக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன் – என்றார்.

# கண்டியில் இன்றும் நில அதிர்வு



கொழும்பு, செப்.02

கண்டி – பல்லேகல பகுதியில் இன்று மீண்டும் நில அதிர்வு பதிவாகியது.

இன்று புதன்கிழமை காலை 7.06 மணிக்கு இவ்வாறு நில அதிர்வு ஏற்பட்டதாக புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணி யகம் தெரிவித்தது.

இது உண்மையில் இயற்கையான நில நடுக்கமா அல்லது வேறு காரணத்தால் ஏற்பட்டதா என்பது இன்னும் கண்டறியப்படாத நிலையில் ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கண்டி, ஹரகாமா மற்றும் திஹான வில் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமையும் நில அதிர்வுகள் பதிவாகியமை குறிப்பிடத்தக்கது.

# மகியங்கனையில் கோர விபத்து; 5 விரிவுரையாளர்கள் படுகாயம்!





கொழும்பு, செப்.02

பதுளை – மகியங்கனை, சொரணதொட்ட பகுதியில் இடம்பெற்ற விபத்தில் விரிவுரையாளர்கள் ஐவர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இன்று அதிகாலை 2.50 மணி யளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். விரிவுரையாளர்கள் பயணித்த கார் வீதியை விட்டு விலகி 40 அடி பள்ளத்தில் வீழ்ந்தமையினால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது பெண் விரிவுரையாளர்கள் நால்வரும் ஆண் விரிவுரையாளர் ஒருவருமே படுகாயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் ஒருவர் கர்ப்பிணி எனக் கூறப்படுகின்றது.

விபத்து குறித்து வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார் மேலதிக விசா ரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்

# ‘13’, ‘19’ முழுமையாக நீக்கப்படவேகூடாது!

## டிலான் பெரேராவும் ஆதரவுக் குரல்



கொழும்பு, செப். 02

19 இல் சில நல்ல விடயங்கள் உள்ளன. அவை பாதுகாக்கப் படவேண்டும். அதேபோல் 13 ஆவது திருத்தச்சட்டத்திலும் நல்ல விடயங்கள் உள்ளன என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பதுளையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:–

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்காக 20ஆவது திருத்தச்சட்ட மூலம் கொண்டு வரப்படும் என உறுதியளிக்கப்பட்டது. அந்த உறுதிமொழி நிறைவேறப்போகின்றது.

19 இல் சில நல்ல விடயங்கள் உள்ளன. அவை பாதுகாக்கப்பட வேண்டும். அதே போல் 13ஆவது திருத்தச்சட்டத்திலும் நல்ல விடயங்கள் உள்ளன.

எனவே, புதிய அரசமைப்பை இயற் றும்போது மேற்படி சரத்துகளில் உள்ள நல்ல விடயங்களை உள்வாங்க வேண்டும். அவ்வாறு உள்வாங்கி புதிய அரசமைப்பை உருவாக்கினால்தான் அது சிறப்பாக இருக்கும்.

விருப்பு வாக்கு இல்லாமல் புதிய முறையில் தேர்தல் நடத்தப்படும் என உறுதிமொழி வழங்கப்பட்டதாலேயே 19 இற்கு ஆதரவாக அன்று வாக்களித்தோம். இறுதியில் மைத்திரியும், ரணிலும் எம்மை ஏமாற்றினார்கள். உறுதிமொழியை மீறி னார்கள்.

ஜனாதிபதியின் பதவிகாலம் 5 ஆண்டுகள், இரு தடவைகள் மாத்திரமே பதவி வகிக்கலாம், சுயாதீன ஆணைக்குழுக் கள், தகவல் அறியும் உரிமை என்பன சிறப்பான விடயங்கள். அவை தொடர்ந்தும் அப்படியே இருக்கவேண்டும்– என்றார்.

# செட்டிகுளம் துட்டுவாகை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய நுழைவாயில் நேற்று திறந்து வைக்கப்பட்டது





செட்டிகுளம் துட்டுவாகை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய நுழைவாயில்திறப்புவிழா நேற்றைய தினம் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

ஆலய நிர்வாகசபை தலைவர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மதகுருமார்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன்,செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர்,பிரதேசசபை தவிசாளர் மற்றும் கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள்,பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வைரஸ் தொற்றில் இருந்து மேலும் ஐவர் குணமடைவு!

கொழும்பு, செப். 03

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் நால்வர் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் தொற்றிலிருந்து மீண்டவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டாயிரத்து 883 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை, நாட்டில் இதுவரை மூவாயிரத்து 92 பேருக்கு வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களில் இன்னும் 197 பேர் தொடர்ந்து சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இலங்கையில் இதுவரை வைரஸ் தொற்றுக்குள்ளாகி 12 பேர் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் உட்பட

# 14 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை!

கொழும்பு, செப் 03

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நாட்டில் பல மாவட்டங்களுக்கு இன்று நள்ளிரவு வரை சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டை அண்மித்து நிலவும் தாழமுக்க நிலை காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், குருநாகல், கண்டி, கேகாலை, இரத்தினபுரி, கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி ஆகிய 14 மாவட்டங்களும் 'அதி அபாயகரமான' நிலையில் உள்ளதால் வளிமண்டலவியல் திணைக்களம் இந்தச் சிவப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளது.

சில இடங்களில் 200 மில்லிமீற்றருக்கும் அதிக மழை பெய்யும் எனவும், மணிக்கு 70 முதல் 80 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என வும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 16 மணிநேரத்தில் களுத்துறை, காலி மற்றும் கேகாலை ஆகிய மாவட் டங்களில் பெருமளவு அளவு மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காலநிலை மாற்றத்தால் யாழுக்குப் பாதிப்பில்லை



யாழ் மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்திற்குள் ஏற்பட்ட அசாதாரண கால நிலையால் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை என யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் சூரியராஜ் தெரிவித்துள்ளார்.

தற்போது உள்ள மழையுடன் கூடிய காலநிலை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் –

தற்போது வளி மண்டலத்தில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை காரணமாக ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை காரணமாக யாழ் மாவட்டத்தில் கணிசமான அளவு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

ஏனையமாவட்டங்களுடன் ஒப்பி டும்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை எந்த வித அனர்த்தங்களோ சேதங்களோ இடம்பெற்றனவாக யாழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவபிரிவிற்கு அறிக்கைகிடைக்கவில்லை.

அடுத்து வரும் 18 மணித்தியாலங்களுக்கு இந்த நிலைமை தொடர்ச்சியாக நீடிக்கும் என வளிமண்டல திணைக்களத்தினரால் எதிர்பார்க்கப்படுவதால் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும் குறிப்பாக கடற்தொழிலில் ஈடுபடுவோர் மிகவும் அவதானமாக செயற்படுமாறும் கோரப்படுகிறார்கள்.

அதிலும் கடல் பகுதிகளில் 70 - 80 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக் கூடிய நிலை காணப்படுவதால் மீன வர்கள் மிகவும் அவதானமாக செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்!

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரண மாக சில மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் காலி ஆகிய நான்கு மாவட்டங்களுக்கு இவ்வாறாக மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# இலங்கையில் 48 மணி நேரத்தில் 80 பேருக்கு கொரோனா தொற்று

## ஆபத்து நீடிக்கின்றது என இராணுவத் தளபதி எச்சரிக்கை

கொழும்பு, செப் .03

இலங்கையில் கடந்த 48 மணி நேரங்களில் 80 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என இராணுவத் தளபதியும் கொரோனா ஒழிப்புச் செயலணியின் தலைவருமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின் உத்தி யோகபூர்வ ருவிட்டர் தளத்தில் நேற்று வெளி யிட்டுள்ள செய்தியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் நீங்கி விடவில்லை. எனவே, மக்கள் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களைக் கடைப்பிடித்து நடக்கவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று ஆபத்து இல்லை என்ற நம்பிக்கையுடன் சிலர் முககவசங்களைக் கூட அணிவதில்லை எனவும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

சமூகத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க மக்கள் கவனமாகச்செயற்பட வேண்டும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



இலங்கையில் கொரோனா வைரஸ் சமூகத் தொற்று இல்லை என்ற போதும் வெளிநாடுகளில் இருந்துநாடுதிரும்பியநிலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவாகள் அதிகளவில் தொற்றுக்குள்ளாகி வருவது கவலைகளை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.






காலைக்கதிர் Kalaikkathir

# சஜித் தலைமையில் மலர்கின்றது புதியதொரு அரசியல் கூட்டணி



**கொழும்பு,செப்ரெம்பர் 03**

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் புதியதொரு அரசியல் கூட்டணி உதயமாகவுள்ளது எனத் தெரியவருகின்றது.**

அக்கூட்டணிக்கு 'ஐக்கிய மக்கள் கூட்டணி' என பெயரிடப்படவுள்ளது எனவும், அடுத்த இருவாரங் களில் கூட்டணி குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகவுள்ளது என வும் தெரியவருகின்றது.

தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கி ரஸ் மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியன தற் போது சஜித் அணியுடன் கூட்டணி வைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைப் பதவியில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் அக்கட்சியும் இணைத் து க் கொள்ளப்படவுள்ளது.

# பஸில் இப்போது நாடாளுமன்றுக்குள் நுழைவதற்குத் தடை ஏதுமில்லையாம்

அமைச்சர் விமல் வீரவன்ஸ கூறுகின்றார்



பஸில் ராஜபக்ஷவுக்கு இப்போது நாடாளுமன்றில் நுழைவதற்கு எந்த தடையும் இல்லை என்று அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு இப்போது நாடாளும ன்றில் நுழைவதற்குத் தடை எதுமில்லை என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுப் பத்திரிகையாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே இதைவர் கூறி னார். தொடர்ந்து தெரிவிக்கையில் –

பஸில் ராஜபக்ஷவின் அமெரிக்கக் குடியுரிமை ரத்து செய்யப்பட்டால், அவர் நாடாளுமன்றத்திற்குள் நுழைய முடியும் என்றும் அவர் கூறினார்.

கோட்டாபய ராஜபக்ஷ தனது அமெரிக்கக் குடியுரி மையை முறையாக ரத்து செய்து இலங்கையின் ஜனாதிபதியானார்.

அதேபோல் பசில் ராஜபக்ஷ அத்தகைய முறை யில் நாடாளுமன்ற உறுப்பினராக முடியும் என்றும் வீரவன்ஸ கூறினார்.

# வங்கி முகாமையாளருடன் சர்ச்சை கடை உரிமையாளர்கள் மூவர் கைது

நேற்று சங்கானையில் உள்ள வங்கி ஒன்றின் முகா மையாளர் ஒருவருக்கும் வங் கிக்கு அருகில் உள்ள கடை யொன்றில் வேலை செய்யும் இளைஞன் ஒருவருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து மூன்று கடைகளின் உரிமை யாளர்களும் மானிப்பாய் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள் ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

நேற்று வங்கியின் முகா மையாளர் வங்கிக்கு முன்னால் உள்ள வீதியில் நின்ற பெண் ணொருவருடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

இதனை அவதானித்த கடை யில் உள்ள இளைஞர் அவர் களைக் கிண்டல் செய்ததா ரெனக் கூறப்படுகிறது. இதனால் முகாமையாளருக்கும் அந்த இளைஞனுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

வங்கி முகாமையாளர் மானிப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியமையை யடுத்து பொலிஸார் அங்கு வந்தனர்.

மோதலில் ஈடுபட்ட இளை ஞன் தப்பிச் சென்றதையடுத்து அந்தக் கடையின் உரிமை யாளரையும் அருகில் உள்ள ஏனைய இரு கடைகளினது உரிமையாளர்களையும் பொலி ஸார் கைது செய்தனர்.

# சம்பிக்கவின் பிணை நிபந்தனைகளை குறைக்குமாறு நீதிமன்றில் கோரிக்கை

முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக் கள் சக்தி யின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தி ன் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் மூல ஆவணக் கோப்பை தமது நீதிமன் றத்தில் சமர்ப்பிக்குமாறு, கொழும்பு நீதிவான் நீதிமன்றத் தின் மேலதிக நீதிவான் காஞ்சனா நிரஞ்சனி டி சில்வா நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 2016ஆம் ஆண்டு இராஜகிரிய பிரதேசத்தில் கவனக் குறைவாக வாகனம் செலுத்தி யபோது, இளைஞர் ஒருவர் விபத்தில் சிக்கிய சம்பவம் குறித்து, பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு நேற்று கொழும்பு நீதி வான் நீதிமன்றத்தின் மேலதிக நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, தனது கட்சிக்காரர் களுக்கு பிணை தொடர்பில் விதிக்கப்பட்ட ஒரு சில நிபந்தனைகளை நீக்குமாறு, பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட பிரதிவாதிகள் சார்பில் முன் னிலையான சட்டத் தரணி கோரிக்கையை முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த மேலதிக நீதிவான், பிரதி வாதிகளுக்கு மேல் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட பிணை நிபந்தனைகள் எவை என அறிவதற்காக, குறித்த வழக்கின் மூல ஆவணத்தைச் சரி பார்க்க வேண்டியுள்ளது எனத் தெரிவித்தார்.

இதற்கமைய, குறித்த வழக்கை எதிர் வரும் ஒக்டோபர் 07ஆம் திகதிக்கு ஒத்திவைத்த மேல திக நீதிவான், மூல ஆவணக் கோப்பை அன் றைய தினம் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

# மட்டக்குளியில் கோர விபத்து; பெண் உட்பட இருவர் மரணம்

**மேலும் இருவர் உயிருக்குப் போராட்டம்**



கொழும்பு 15, மட்டக்குளியில் நேற்று காலை இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்ணொருவர் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

லொறி ஒன்று, இரண்டு ஓட்டோக்களுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள் ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஓட்டோ ஒன்றின் சாரதியும் அதில் பயணித்த பெண்ணொருவருமே உயிரிழந்துள்ளனர் என வும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்விபத்தில் படுகாயமடைந்தமேலும் இரு வர், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவ சர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# வவுனியா வைத்தியசாலை சிற்றூழியர்கள் போராட்டம்!



வவுனியா, செப்.03

வவுனியா வைத்தியசாலை சிற்றூழியர்களால் ஆர்ப்பாட்டமும், பணிப்புறக் கணிப்பும் நேற்று முன் னெடுக்கப்பட்டது.

வைத்தியசாலை வளாகத்தில் காலை 9 மணிக்கு முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் காலை 11 மணி வரையும் இடம் பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக் கையில்–

தமது பணி நடவடிக்கைகளுக்கு இடை யூறு ஏற் படுத்தும் வகையில் கைவிரல் அடையாள நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அதனை தவிர்த்து பழையமுறையின்படியே தாங்கள் கையொப்பம் இடு வதற்கான செயற்பாட்டை தொடரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதுடன், தமது கோரிக்கை நிறைவேறா விடில் போராட்டங்கள் தொடரும் என்றும் எச்சரித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரச சட்டங்கள் அனைவருக்கும் சமன், எமக்கு மட்டும் ஏன் இந்த அநீதி,மன அமைதியுடன் பணிசெய்ய விடு போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

# ஒரு லட்சம் அரச வேலை வாய்ப்பு வழங்கலில் வடக்கு, கிழக்கு புறக்கணிக்கப்படமாட்டாது!

## ஜனாதிபதி, பிரதமர் உறுதி அளித்தனர் என்கிறார் டக்ளஸ்

ஒரு இலட்சம் வேலை வாய்ப்பில் வடக்கு, கிழக்கு புறக்கணிக்கப்பட மாட்டாது என்றும் குறித்த பிரதேசங்களுக்கான ஒதுக்கீடு உரிய முறையில் விரைவில் வழங்கி வைக்கப்படும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் உறுதியளித்துள்ளனர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சின் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பிரஸ்தாபிக்கப்பட்ட போதே ஜனாதிபதி மற்றும் பிரதமரினால் மேற்படி உறுதி மொழி வழங்கி வைக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வாக்குறுதிக்கமைய நாடளாவிய ரீதியில் வறிய குடும்பங்களுக்கு ஒரு லட்சம் அரசாங்க வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் செயற்றிட்டம் வடக்கு கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பிரதேசங்களில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து அமைச்சரவைக் கூட்டத்தின்போது பிரஸ்தாபித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாட்டின் ஏனைய பிரதேச மக்களைப் போன்று வடக்கு கிழக்கு மக்களும் ஒரு லட்சம் வேலை வாய்ப்பு திட்டத்தின் பலாபலன்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர், 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்பதில் இந்த அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது என்ற அடிப்படையில், எந்த வகையான பிரதேச,இன, மத ரீதியான பாகுபாடுகள் தலை தூக்க இடமளிக்கப்பட மாட்டாது என்பதை வலியுறுத்தியமையுடன் ஒரு லட்சம் வேலை வாய்ப்பு தற்போது ஒரு சில காரணங்களுக்காக தற்காலிகமாக தடுத்து நிறுத்தப்பட்ட போதிலும் விரைவில் வடக்கு,கிழக்கு பிரதேங்களுக்கான நியமனங்கள் வழங்கி வைக்கப்படும் எனவும், குறித்த பிரதேச மக்கள் தேவையற்ற வகையில் குழப்பமடையத் தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.- என்று அக்குறிப்பு மேலும் தெரிவித்தது.



## நான் வழங்கிய...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஆழமாகச் சிந்தித்து நியமிக்கப்பட்ட நியமனங்களை மாற்றி, பல்வேறு அழுத் தங்களின் காரணத்தினால் வேறு ஒருவரை அதற்காக நியமிப்பதற்கு எவ்வித எதிர்பார்ப்பும் தம்மிடம் இல்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார். அதனால் சில நியமனங்களுக்கு எதிராக அதனை மாற்றுமாறு தமக்கு அல்லது அரசுக்கு அழுத்தங்கள் கொடுக்க வேண்டாமென ஜனாதிபதி அனைவரிடமும் கேட்டுக்கொண்டார்.

நியமனங்களுக்கு எதிரான கருத்துக் கள் மற்றும் எண்ணங்களை முன்வைப் பதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட நபர்க ளுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமைகள், விடயதானங்களை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு முடியாமல் போவ தோடு மட்டுமன்றி சமுதாயத்தில் அந்நபர்கள் பற்றி தப்பான எண்ணங்கள் ஏற்படுவதினால் அரசு முன்னெடுத்து வருகின்ற வேலைத்திட்டங்களும் வீணடிக்கப்படு

மென்பதே தனது கருத்தாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

# முள்ளிக்குளத்தில் யானை தாக்கி நேற்றும் ஒருவர் படுகாயமுற்றார்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,செப்.03

மன்னார், முள்ளிக்குளம் பகுதியில் அதிகாலையில் மீன்பிடிக்கச் சென்றவரை யானை தாக்கியது. அவர் படுகாயமடைந்த நிலையில் உயிர் தப்பி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் துரைச்சாமி - செல்வராசா (வயது 50 )என்னும் 4 பிள்ளைகளின் தந்தையே யானையின் தாக்குதலுக்கு இலக்கானார்.

முள்ளிக்குளத்தில் வசிக்கும் இக்குடும்பஸ்தர் அருகில் உள்ள குளத்தில் நேற்று முன்தினம் மாலையில் மீன் பிடிக்கும் நோக்கில் வலையை பாய்ச்சியுள்ளார். அந்த வலையை எடுப்பதற்காகவே நேற்றுக் காலை 6 மணியளவில் துவிச்சக்கர வண்டியில் அவர் பயணித்துள்ளார்.

அச்சமயம் பாதையோரம் மறைந்து நின்ற யானை மீனவரைத் துவிச்சக்கர வண்டியுடன் தூக்கி வீசியுள்ளது. இதன்போது படுகாயமடைந்த குடும்பஸ்தர் யானையிடம் இருந்து ஒருவாறு தப்பியுள்ளார். இருந்தபோதும் ஏற்பட்ட காயம் காரணமாக அம்புலன்ஸ் மூலம் வவுனியா வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

# மரண அறிவித்தல்

## அமரர் பொன்னையா திரவியநாதன்

### சுதுமலை, காரைநகர், ஆனைக்கோட்டை



**தோற்றம்: 06.01.1937** **மறைவு: 01.09.2020**

**மதவடி வீதி சுதுமலை வடக்கை பிறப்பிடமாகவும் பொன்னையா லேன் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.பொன்னையா திரவியநாதன் 01.09.2020 செவ்வாய் கிழமை தனது 84வது வயதில் இயற்கை எய்தினார்.**

**அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா சுந்தரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொற்குணதேவியின் அருமை சகோதரரும் காலஞ்சென்ற இலங்காதேவி (ஆனைக்கோட்டை), காலஞ்சென்ற ஞானாம்பிகை(காரைநகர்), மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் நேசமிகு கணவரும், திரவியகுமாரி(பிறேமா- டென்மார்க்), சித்திரகுமாரி(பிறீசா - டென்மார்க்), உருத்திரதீசன்(நேதாஜி - டென்மார்க்), விக்கிரமதீசன்(பாபுஜி - கனடா), ஞானேந்திரகுமாரி(விஜி - கனடா), பிறேமள குமாரி(ராஜி - அவுஸ்திரேலியா), பிரமேந்திரதீசன்(ராஜாஜி. தம்பி - கனடா), காலஞ்சென்ற ஜெயதீசன், கோமளதீசன்(சுபாஜி - ஆனைக்கோட்டை), திவ்வியதீசன்(பாபாஜி -சுவிஸ்), சூரியதீசன்(நேருஜி - டென்மார்க்), விமலதீசன் (வினோபாஜி - ஆனைக்கோட்டை), யது குலதீசன்(காந்திஜி - டென்மார்க்), பிரியதர்சினி(தீபா - ஆனைக்கோட்டை) ஆகியோரின் தகப் பனாரும், காலஞ்சென்ற வ.நடராசா அவர்களின் மைத்துனரும், காலஞ்சென்ற இதயசூரியன் மற் றும் வாகீசன், வாசுதன் ஆகியோரின் தாய் மாமனாரும், இளங்கோவன், பாரதிதாசன், கெரி, மிலானி, மனோகாந்தன், பிரபாகரன், அபிராமி, சரஸ்வதி, துர்க்கா, டிசாந்தி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.**

**அன்னாரது இறுதிக்கிரியைகள் பொன்னையா லேன், ஆனைக்கோட்டையில் உள்ள அன்னாரது இல்லத்தில் 03.09.2020 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று யாழ் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.**

**தொடர்புகளுக்கு:-**
**விமலதீசன்(ஆனைக்கோட்டை) - 077 301 9340**

**தகவல்: - பிரமேந்திரதீசன்(கனடா)**
**00416 821 8390**

# காலியிலிருந்து பாத யாத்திரையாக யாழ் வந்தவர் நேற்றுத் திரும்பினார்





(கலையமுதன்)

யாழ்ப்பாணம், செப். 03

தென்னிலங்கை காலி மாவட்டம் அக்மீமன பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய பாலகுமார என்ற பிரஜை காலியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பாத யாத்திரையாக வந்து நேற்று காலை யாழ்ப்பாணத்தில் இருந்து காலிக் குத் திரும்பிச் செல்லும் தனது பாத யாத்திரையை ஆரம்பித்தார்.

கடந்த மாதம் எட்டாம் திகதி காலையில் இருந்து யாழ்ப் பாணத்துக்கான பாதயாத்திரையின் ஆரம்பித்த அவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார்.

யாழ்ப்பாணம் நாக விகாரையின் விகாராதிபதி மீகா ஜந்துரஸ்ரீ விமலரத்ன தேரரை சந்தித்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்ட அவர் நேற்று காலை தனது பாதயாத்திரையைக் காலிக்கு ஆரம்பித்தார்.

நேற்று இந்த பாதயாத்திரையின் ஆரம்ப நிகழ்வில் 51வது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் டெலிட் ரத்நாயக்க கலந்துகொண்டு உத்தியோகபூர்வமாக இலங்கை கொடியினை வழங்கி பாதயாத்திரையை ஆரம் பித்து வைத்தார். நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 தொற்றிலிருந்து இலங்கை முழுமையாக விடுபட வேண்டும், நாட்டில் சாந்தி சமாதானம் ஏற்படவேண்டும், முப்படையினருக்கான ஆசீர்வாதங்கள் கிடைக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த பாதயாத்திரையை அவர் ஆரம் த்தமை குறிப்பிடத்தக்கது.

# வீதிகளில் குப்பை வீசுவோரை மடக்க நடமாடும் கண்காணிப்பு கமெராக்கள்

## மட்டக்களப்பு மாநகரசபை முன்னோடித் திட்டம்







மட்டக்களப்பு,செப்.03

மட்டக்களப்பு மாநகரைச் சுத்தமான மாநகராகப் பராமரிக்கும் வகையில் நடமாடும் கண்காணிப்பு கமெராக்களைப் பொருத்தும் நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாநகர சபை ஆரம்பித்துள்ளது.

மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக வீதியோரங்களில் குப்பை கழிவுகள் மற்றும் விலங்குகளின் கழிவுகளை வீசி செல்லும் செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன.

இதன் காரணமாக இச்செயற்பாடுகளை தொடரும் நபர்களைக் கண்காணிக்கும் வகையில் இரகசியமான முறையில் கண்காணிப்பு கமராக்கள் பொருத் தப்பட்டு அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்படி முதற்கட்டமாக வடிவமைக்கப்பட்ட மேற்படி கமெராக்களை உள்ளடக்கிய தொகுதியை நேற்று மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர்களிடம் கையளித்தார்.

மட்டக்களப்பு மாநகரைச் சுத்தமான மாநகரமாகப் பேணும் நோக்கில் 10 சுகாதார பிரிவுகளில் மேற்படி கண்காணிப்பு கமெராக்களை பொருத்தவுள்ளதாகவும், இதன் ஊடாக குப்பைகளை வீதிகளில் வீசிச் செல்லும் நபர்களை அலுவலகத்திலிருந்தே அடையாளங்கண்டு அவர்களுக்கெதிராக உரிய நடவடிக்கைகளை எடுக்க கூடியதாக இருக்கும் என்றும் மாநகர முதல்வர் இதன் போது கருத்துத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாநகர ஆணையாளர் கா.சித்திரவேல், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், பிரதி ஆணையாளர் உ.சிவராஜா மற்றும் மாநகர சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.







இயற்கை முறையில் வளர்த்தெடுக்கப்பட்ட காய்ப்பதற்கு தயாராக உள்ள மரக்கறிக் கன்றுகள் விற்பனைக்கு உண்டு.

* சரியான அளவில் இயற்கைப் பசளைகள் இடப்பட்டு வளர் பைகளில் (Grow Bag)பராமரிக்கப்பட்டவை.
* வீட்டுத் தோட்டம், மாடித் தோட்டம் மற்றும் குறைந்தளவு இடவசதி உள்ளவர்களுக்கு பொருத்தமானது.

உங்கள் தோட்டத்தை நாங்களே தருகிறோம்....
நீர் ஊற்றிப் பராமரித்தால் போதுமானது .....



551A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 4927 782 / 076 740 3814


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.09.2020 இல் வெளியிடப்பெற்றது.